## சித்தர்கள் போற்றி

அண்டம் பலவும் போற்றும் பெரும் தகையீர் போற்றி
ஆதவன் ஞானமும் அருள் தேகமும் கொண்டீர் போற்றி
இச்சையொழி மனமும் கன்னல் சுவை குணமும் உடையீர் போற்றி
ஈந்து உவக்கும் கருணை பொலி வதனம் திகழ்வீர் போற்றி

உள் ஒளி உணர்வும் உயர்நிலை சாதனையும் வல்லீர் போற்றி
ஊழிகாலமும் சாகாநிலை யோகத்து இருப்பீர் போற்றி
எமனும் தீண்டா வாசியோகக்கலை புரிவீர் போற்றி
ஏடுகள் பலவும் வகுத்து எங்களுக் கருளிய பெரியீர் போற்றி

ஐயீரு நாதமும் எண்வகை சித்தியும் அறிவீர் போற்றி
ஒளிர் பொருள் தமக்குள் ஒளிரக் கண்டீர் போற்றி 10
ஓங்கார நாதமே அண்டம் பலவின் ஆதாரமென தெளிந்தீர் போற்றி
அவ்வும் உவ்வும் மம்மும் மூலத்தின் குறியென உரைத்தீர் போற்றி

கருணை மனமே கடவுளின் தலமென கண்டீர் போற்றி
காண் ஒணா பரம்பொருள் கர்வம் அழிய விளங்கும் என்றீர் போற்றி
கிளர் நிலை உணர்வில் வாலை சுடரில் கலந்திருப்பீர் போற்றி
கீழாக்னியை மேலேற்றி ஆதார யோகம் பயின்றீர் போற்றி

குடமது உடலென நிலையாமை போதித்த ஞானியரே போற்றி
கூசாத ஒளியை மேலான விழியால் கண்டின்புற்று இருப்பீர் போற்றி
கெடுவழி தவிர்த்து உறுவழி உவப்புடன் உரைப்பீர் போற்றி
கேணி ஊற்றாய் அண்டியவர்க்கு அருளும் சித்தரே போற்றி 20

கயிலை வாழ் ஈசனின் மார்கம் கண்ட பெரும் சித்தரே போற்றி
கொற்றவனும் அற்றவனும் ஒன்றென பாவிக்கும் சித்தரே போற்றி
கோன்மொழிக்கும் அஞ்சா நிலைமாறா வல்லப சித்தரே போற்றி
கௌபீனமும் தரு நிழலும் நிறை வாழ்வென வாழும் சித்தரே போற்றி

வாதக் கலையும் வாழும் கலையும் உபதேசித்த சித்தரே போற்றி
ஓதற்கரிய ஏமக்கலையை எமக்கும் அருள்வீர் சித்தரே போற்றி
பாதம் பதியும் இடமெல்லாம் புனிதமாக்கும் சித்தரே போற்றி
மாதவம் கூடி மகா சமாதி அமர்ந்து நல்ஆசி அருளும் சித்தரே போற்றி

மலையும் முகடும் குன்றும் குகையும் மகிழும் சித்தரே போற்றி
இலையும் சருகும் காற்றும் கனியும் ஏற்கும் சித்தரே போற்றி 30
கலையும் போகமும் அலையும் ஆவலும் வெறுக்கும் சித்தரே போற்றி
நிலையும் பொருளை நாடிடும் தாகமும் கூடிடும் சித்தரே போற்றி

எண்வகை யோகமும் இயல்புடன் பயிலும் சித்தரே போற்றி
எண்வகை சித்தியும் பண்புடன் புரியும் சித்தரே போற்றி
கண்வகை தீட்சையும் கனிவுடன் அளிக்கும் சித்தரே போற்றி
பண்தொகை கொண்டும் பாக்களை புனையும் சித்தரே போற்றி

அகத்தும் புறத்தும் அமைதியின்பம் அருளும் அகத்திய சித்தரே போற்றி
சுகத்தும் துக்கத்தும் துணையாக நிற்கும் அகத்திய சித்தரே போற்றி
சிகரமும் தாழ்வும் மனநிலை மாறா சுகநிலை அருள் அகத்திய சித்தரே போற்றி
மகத்துவம் உற்ற மகத்தான அகத்தீச பொதிகை நாதரே போற்றி 40

கார்முகில் மழைவளம் அளிக்கவல்ல காளாங்கி நாத சித்தரே போற்றி
பார்தனில் பாவியும் கடைத்தேற உபதேசிக்கும் காளாங்கி நாத சித்தரே போற்றி
ஊர்தனில் மாந்தர்க்கு உவந்தே பிணிபோக்கும் காளாங்கி நாத சித்தரே போற்றி
சீர்மிகு சிவயோகம் எமக்கருள் பெருந்தகை காளாங்கி நாதரே போற்றி

புனித நாதனாம் புற தேச சித்தனாம் போகர் சித்தரே போற்றி
மனித குலத்திற்கு மந்திர மகேந்திர ஜால வித்தை அருளிய போகர் சித்தரேபோற்றி
நனி தரும் வாதவித்தை ஏமவித்தை சூட்சும உரைத்த போகர் சித்தரே போற்றி
இனிதான யோகம் கூட பிணிபடா தேகம் பெறும் முறை வகுத்த போகர் சித்தரே போற்றி

தேகமதை வகுத்து தேர்ந்த சிகிச்சை முறை கண்ட தேரைய சித்தரே போற்றி
போகமதை ஒதுக்கி ஜலமதில் மூழ்கி சமாதி அடங்கும் தேரைய சித்தரே போற்றி 50
ஆகம விதிகளும் அருள் நாத தத்துவங்களும் முற்றுணர்ந்த தேரைய சித்தரே போற்றி
சோகமது ஒழித்து சுத்தஞான பரதத்துவத்தில் திளைக்கும் தேரைய சித்தரேபோற்றி

கள்ளத் தனமும் கயமை செயலும் கடிதாய் வெறுக்கும் கருவூர் சித்தரே போற்றி
தெள்ளத் தெளிந்த ஞானமும் திரிபடா சிந்தையும் உள்ள கருவூர் சித்தரே போற்றி
எள்ளத் தகா வாழ்வும் எவர்க்கும் உதவும் குணமும் கொண்ட கருவூர் சித்தரேபோற்றி
உள்ளத் தாற்றலால் பெரு லிங்க பந்தனம் கட்டிய கருவூர் சித்தரே போற்றி

அடர் காட்டிடை அமர்ந்து யோக தவம் புரியும் இடைகாட்டு சித்தரே போற்றி
சுடர் ஒளி தேவி பலத்தால் கோள்வினை தகர்த்து காட்டிய இடைகாட்டு சித்தரே போற்றி
தொடர் மரண பிணி வகைகளுக்கும் கல்ப மருந்துகள் கண்ட இடைகாட்டு சித்தரே போற்றி
கடல் சூழ் புவியில் அமிர்த மூலிகளின் ஆற்றலை வகை செய்த இடைகாட்டு சித்தரே போற்றி 60

புரியாத தத்துவத்தையும் எளிதாய் புரியும் வகை போதிக்கும் புலஸ்திய சித்தரே போற்றி
அரிதான மந்திரங்களும் தமக்கே எளிதாக வசமாக்கும் புலஸ்திய சித்தரே போற்றி
விரிவான அண்டம் முழுதும் ககன மார்கமாய் கடக்க வல்ல புலஸ்திய சித்தரே போற்றி
பரிவான சிந்தை கொண்டு பறிபோன பக்தர்களின் பொருள் மீட்டுத்தரும்
புலஸ்திய சித்தரே போற்றி

அன்பு நிறை சிந்தையரே அங்கமெலாம் மருந்தாம் அழுகண்ண சித்தரே போற்றி
துன்பு நிறை மாந்தரின் பிணி போக்கி அருளும் அழுகண்ண சித்தரே போற்றி
முன்பு நீர்தாம் எளிய உயிர்களின் வதை தடுத்து நின்ற அழுகண்ண சித்தரேபோற்றி
இன்புற்று வாழ எளிய தேக வகை யோக முறை வகுத்த அழுகண்ண சித்தரே போற்றி

காழியில் சமாதியுற்று மாந்தரைக் காத்தருளும் சட்டை நாத சித்தரே போற்றி
நாழியில் தம்மை சூழும் துஷ்ட சக்திகளை அழிக்கவல்ல சட்டை நாத சித்தரே போற்றி 70
வாழினில் உயிர் வதை தவிர்த்து வாழ்தலே காருண்யம் என்ற சட்டை நாத சித்தரே போற்றி
பாழினில் செல்லும் வாசியடக்கி ஊழிக்காலம் வாழும் யோகம் கண்ட
சட்டை நாத சித்தரே போற்றி

பண்பு திகழ் பவித்ர குண்டலினி யோக சித்தி நாதரே பாம்பாட்டி சித்தரே போற்றி
அண்டம் புகழ் குரு மருந்து முடிக்கும் வாத வித்தகரே பாம்பாட்டி சித்தரே போற்றி
கண்கவர் எழிலோன் மருதமலை பெருமானை நிறுவித் தொழுத பாம்பாட்டி சித்தரே போற்றி
மண்ணுலக மாந்தர் அறிய குண்டலினி யோகமுறை அருளிய பாம்பாட்டி சித்தரே போற்றி

சதுரகிரி குகையில் யுகாந்திர காலம் யோகம் கூடிய ராம தேவ சித்தரே போற்றி
அதர்ம வகை ஆசையில் புரியும் ரசவாத வித்தைதனை அழிக்கும்
ராம தேவ சித்தரே போற்றி
பாதகம் புரியும் பாவியரை பட்சமின்றி தண்டிக்கும் குழும தலைவரே
ராம தேவ சித்தரே போற்றி
சூதகம் புரிந்து ஒளி வோரை பிணைத்து மன்றத்தில் நிறுத்தும்
ராம தேவ சித்தரே போற்றி 80

கொடிதான பாஷாண வகை மருந்துகளின் முதல்வரே கொங்கண சித்தரே போற்றி
கடிதான ரசவாத வித்தைகளை எளிதாய் புரியும் கொங்கண சித்தரே போற்றி
முடியாத வித்தை ஏதுமில்லை குருவருள் கூடின் என போதித்த
கொங்கண சித்தரே போற்றி
கொடிதான நச்சு ரோகம் அழிக்கும் செந்தூர பஸ்பம் கண்ட
கொங்கண சித்தரே போற்றி

நந்தி தேவனின் தீட்சை ஞானம் பெற்ற போற்றரும் திருமூல சித்தரே போற்றி
சிந்தனைக் கெட்டா நூறின் வகை குளிகை மணிகள் கண்ட திருமூல சித்தரே போற்றி
உந்தன் தத்துவ வர்க சீடர்களை வழிமுறையாய் பயிற்றுவித்த திருமூல சித்தரேபோற்றி
முந்தி வந்த ஆதி சக்தியின் அட்சர சக்கரம் அமைத்து தந்த திருமூல சித்தரே போற்றி

பேசுதல் அற்று பெருஞான யோகம் பிறழாத பிண்ணாக்கீசரே போற்றி
கூசுதல் அற்று ஒளிரும் மூலச்சுடர் கனலில் கலந்திருக்கும் பிண்ணாக்கீசரே போற்றி 90
மாசு இல்லா பராபரை திரிகோணத் திரேதாயை தரிசித்திருக்கும்
பிண்ணாக்கீசரே போற்றி
வீசு மணம் கமழ் கோணக் குறிஞ்சியில் குகை வாசம் இருக்கும்
பிண்ணாக்கீசரே போற்றி

கமலமுனி நாதனே கயிலை மலை யோகனே நற்போத கமலமுனி சித்தரே போற்றி
இமவான் மகள் ஈசனின் தேவி அருள் உபதேசம் பெற்ற கமலமுனி சித்தரே போற்றி
அமரர் போற்றும் ஆரூர் தலத்தில் அனந்த கால யோகம் கொண்ட
கமலமுனி சித்தரே போற்றி
எமனது உலகம் புகுந்த உயிரையும் மீட்டு வரவல்ல கமலமுனி சித்தரே போற்றி

பரந்தாம கிருஷ்ணனின் மறுவடிவாய் தோற்றும் சிவ வாக்கிய சித்தரே போற்றி
நரமாந்தர் தம்மில் மேலோர் கீழோர் பேதமில்லை என முழங்கிய
சிவ வாக்கிய சித்தரே போற்றி
கரம் துடிகொண்டு ஆடும் சிவநடன மந்திரங்களை பகுத்த
சிவ வாக்கிய சித்தரே போற்றி
பரவச நிலையில் இயற்கை மூலரகசியங்கள் கண்டு தெளிந்த
சிவ வாக்கிய சித்தரே போற்றி 100

புலிபோன்ற தோற்றம் கொண்டவரே நடராஜர் தரிசனம் காண்பவரே
புலிப்பாணி சித்தரே போற்றி
ஒலிக்கும் உடுக்கை நாதத்தில் ஆன்ம லயம் சுகித்திருக்கும் பெரும்
புலிப்பாணி சித்தரே போற்றி
சிலிர்த்து மோகித்து சிவனடி அமரும் பெரும் பேரு பெற்ற
புலிப்பாணி சித்தரே போற்றி
நலிந்து வாடும் எங்களின் துயரங்களும் அச்சங்களும் அறவே அகற்றி
அருள வேண்டும் புலிப்பாணி சித்தரே போற்றி

மதுரை தலத்தில் மகத்தான பல சித்துகள் புரிந்த மச்ச முனி சித்தரே போற்றி
மதுர மொழியில் மாந்தரை ஈர்த்து உயர் பொருள் உபதேசித்த
மச்ச முனி சித்தரே போற்றி
புதன் தலமான நான்மாட கூடலில் சமாதி யோகம் கூடிய
மச்ச முனி சித்தரே போற்றி
பதவி புகழ் செழுமை நற்பேறுகளை நாளும் பக்தருக்கு அளிக்கும்
மச்ச முனி சித்தரே போற்றி 108